BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பழங்குடியினர் உரிமைகளும் இந்திய அரசியலமைப்புச் சட்டங்களும் – ஓர் ஆய்வு

**சிவரஞ்ஜனி . ச**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம்,

திருவனந்தபுரம்- 695581 மின்னஞ்சல்: sivaranjani1521@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையோடு இயைந்து வாழும் தொல்குடி மக்களின் வாழ்வியல், அவர்களுக்கான அரசியலமைப்புச் சட்டங்கள் மற்றும் அரசுத் திட்டங்களின் செயல்பாடுகளை இக்கட்டுரை ஆராய்கிறது. பழங்குடியினர் (Scheduled Tribes) என்பவர் ஆதி காலம் தொட்டுத் தனித்துவமான மொழி, பண்பாடு மற்றும் இயற்கை சார்ந்த தொழில்களுடன் வாழும் மூத்த குடியினர் ஆவர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வளங்களைச் சுரண்டத் தனிப் பிரிவாகப் பிரிக்கப்பட்ட இவர்கள், சுதந்திரத்திற்குப் பிறகும் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கியே காணப்படுகின்றனர். இவர்களுக்காக அரசு உருவாக்கியுள்ள சட்டங்கள் பற்றியும் சிறப்புத் திட்டங்கள் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** பழங்குடிகள், அரசியல், அரசியலமைப்புச் சட்டங்கள், சமூகம், அரசுத் திட்டங்கள்.

## முன்னுரை

பழங்குடி மக்கள் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் தலைமுறை தலைமுறையாக, காலங்காலமாக வாழும் தொல்குடி மக்கள். இவர்களை ஆதிவாசிகள், காட்டுவாசிகள், பூர்வகுடி, தொல் மக்கள் என்றும் கூறுவர். இப்பழங்குடி மக்கள், நாம் நவீன நாகரிகம் என்று கூறும் மாற்றங்களுக்கு அப்பாற்பட்டு இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கையை வாழ்பவர்கள். காடுகள் மலைகள் போன்ற இயற்கை வளங்களையே நம்பி இவர்கள் வாழ்கிறார்கள்.

வேட்டையாடுதல், தேன் எடுத்தல், மூலிகை சேகரித்தல், பாரம்பரிய விவசாயம் போன்ற இயற்கை சார்ந்த தொழில்களையே பெரும்பாலும் இவர்கள் மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு பழங்குடியினரும் தங்களுக்கெனத் தனியான ஒரு அடையாளத்தைக் கொண்டிருக்கின்றனர். தங்களுக்கெனத் தனியான பேச்சு மொழி (பெரும்பாலும் எழுத்து வடிவமும் வரி வடிவமும் இருக்காது), உடைகள், சடங்குகள், இசை, தொழில், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைப் பின்பற்றுகின்றனர். பெரும்பாலும் உணவுக்காகவும் தொழிலுக்காகவும் வெளியுலகத்தைச் சார்ந்து இருக்காமல் தங்களுக்குத் தேவையானவற்றை, மருந்து போன்ற மருத்துவ சிகிச்சை உட்பட இயற்கையில் இருந்து தாங்களே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

இவர்கள் காடுகளிலும் மலைகளிலும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தாலும் இந்திய நிலப்பரப்பில் வாழும் மனிதர்கள் என்ற நிலையில் இவர்களுக்கான பொருளாதாரத் தேவைகளையும், அரசியல் சார்ந்தும், வேலை வாய்ப்பு போன்றவற்றையும் வழங்குவது அரசின் கடமையாகும். அந்த வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இப் பழங்குடியினர்களுக்கான சட்டங்களும் திட்டங்களும்

உள்ளனவா? அது அம்மக்களின் தேவைகளைச் சரியாக, முழுமையாகப் பூர்த்திச் செய்கிறதா? என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பழங்குடி என்னும் சொல்**

இது ஒரு நிலப்பரப்பில் வாழும் பழமையான, அதாவது ஆதி, அசல் மனிதக் குழுக்களைக் குறிக்கும் ஒரு கலைச்சொல்லாகும். இச்சொல் பழம் + குடி என்ற இரு சொற்களின் சேர்க்கையாகும். பழம் என்பது பழமை, தொன்மை, ஆதி, மூத்த என்று பொருள்படும். குடி என்பது மக்கள் கூட்டம், மனிதக் குழு, வம்சம் அல்லது குடியிருப்பு என்று பொருள்படும். எனவே நாகரீக மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்பே பழங்காலம் முதல் தொன்று தொட்டு வாழும் மூத்த மக்கள் என்பதை இச்சொல்லுக்கான பொருளாகக் கொள்ளலாம்.

ஆங்கிலத்தில், Indigenous People என்று குறிப்பிடுகின்றனர். இதன் பொருள் ஆதி தொல்குடி மக்கள் என்பதாகும். மேலும் இவர்களை Tribal People / Tribe என்றும் குறிப்பிடுகின்றனர். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இப்பழங்குடியினர்களைப் பட்டியல் பழங்குடியினர் அதாவது Scheduled Tribes (ST) என்று குறிப்பிடுகிறது. மேலும், இலக்கிய வழக்கில் மலைவாழ் மக்கள், முதுகுடி, மலையின மக்கள், தொல்குடி என்றும் அழைக்கப்படுவர். இந்தியாவில், சாந்தால் (Santhal), கோண்டு (Gond), பில் (Bhil) போன்றவை பெரிய பழங்குடிச் சமூகங்களாக உள்ளன.

தமிழ்நாட்டில், தோடர், கோத்தர், இருளர், காட்டுநாயக்கர், பணியர் மற்றும் குறும்பர் போன்ற 30-க்கும் மேற்பட்ட பழங்குடியினக் குழுக்கள், முக்கியமாக நீலகிரி, ஆனைமலை மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

காடுகளில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மக்கள் பழங்குடி என்ற பிரிவாக ஆங்கிலேயர் காலத்திலேயே பிரிக்கப்பட்டனர் என்பதனை, "ஆங்கில நிர்வாகம் கட்டமைத்த 'காலனி அரசு' முறையில் மக்கள் திரள் பல வகையினங்களாக வகைப்படுத்தப்பட்டன. இந்தியச் சமூகங்களில் ஒரு புதிய சமூக வகையினமாகப் 'பழங்குடி' என்பதை அடையாளப் படுத்தினார்கள்."(தமிழகப் பழங்குடிகள், 2018, ப.40) என்ற பக்தவச்சல பாரதியின் கூற்றிலிருந்து அறியலாம்.

இவ்வாறு பழங்குடிகளைத் தனியான ஒரு பிரிவாகப் பிரிப்பதற்குக் காரணம், அவர்களின் வளங்களைக் கொள்ளை அடிக்கவும், வனத்தினை ஆங்கில நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் தான். இவ்வாறு அவர்களைத் தனிப் பிரிவாகப் பிரித்துப் பழங்குடியினருக்கெனத் தனியாகச் சட்டங்கள் இயற்றி, இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வனங்களிலிருந்து வளங்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பும் இவ்வாறான பிரிவு தொடர்ந்து வந்ததால் பழங்குடியின மக்கள் பொருளாதாரத்திலும் சமூக நிலையிலும் பின் தங்கியவர்களாகக் கருதப்பட்டனர். இதனால் பழங்குடிச் சமூகம் இயற்கை நிலையிலிருந்து மாறி மறைந்து வரும் ஒரு பிரிவாக மாறியது.

"இந்தியாவிலேயே மிகப்பழமையான பழங்குடி எனக் கருதத்தக்க ஆனைமலை காடர்கள் தொடங்கி, மலை விவசாயத்தை ஏற்றுக் கொண்ட மலையாளிகள் வரை பல படிநிலைகளில் வாழும் பழங்குடிகள் தமிழகத்தில் உள்ளனர். எளிமைச் சமூகங்களில் பல இன்று வரை எழுத்துமுறை கூடக் கொண்டிராததால் இவை ஒருபுறம் மறைந்து வருகின்றன." (பக்தவச்சல பாரதி, 2018, 15) என எழுத்து முறை இல்லாததால் பழங்குடியின மக்கள் குறைந்து வருவதாகக் கூறும் அதே

வேளையில், பக்தவச்சலபாரதி அவர்கள் தனது அறிமுக உரையில்,

“இதில் மிகத் தொன்மையாக விளங்குபவர்கள் ‘பழங்குடி’ (ட்ரைப்) மக்கள். இவர்களின் சமூகங்களும் பண்பாடுகளும் காலம் நிகழ்த்திவரும் மாற்றங்களால் மறைந்து வருகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன.” (தமிழகப் பழங்குடிகள், 2018, ப. 8) என்று மறைந்து வரும் தொல்குடிகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பழங்குடியினர் அருகி வரும் காலத்தில் இருந்தாலும் அவர்களுள் பல பிரிவுகள் இருப்பதால் அதன் குழப்பம் காரணமாக அரசின் பல உதவிகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போயின. பல சிக்கல்களுக்கு உள்ளாகி தனது வாழ்வாதாரத்தை இழந்த பழங்குடியினரை மீட்டெடுப்பது அரசின் கடமையாகும்.

எனவே பழங்குடியினருக்கும் அரசின் உதவிகள் கிடைக்கும் வகையில் அவர்களைப் பட்டியல் பழங்குடியினர் என்ற அட்டவணையின் கீழ் கொண்டு வந்து, அவர்களுக்கான உதவிகள் கொடுக்கப்பட்டன.

“பழங்குடிகள் என்ற உடனேயே சமுதாய, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய கல்வியறிவில்லாத மக்கள்தான் நம் கண்முன் வருகின்றனர். இந்நிலை இன்று அரசாங்கத்தின் பெருமுயற்சியால் வெகுவாக மாறிக் கொண்டிருக்கிறது.” அரசாங்கம் இயற்றும் சட்டங்களின் மூலம் பழங்குடியினர்களிடம் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் ஏற்பட்ட சிறு மாறுதல்களை த. விஜயலட்சுமி (இரவாளப் பழங்குடிகளின் வாழ்வியல், 2008,11) குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பழங்குடியினர்களுக்கெனச் சிறப்புச் சட்டங்களும் திட்டங்களும் உருவாக்கி, அவர்களின் பண்பாடு, கலாச்சாரம், மொழி, பொருளாதார நிலை, சுய வேலைவாய்ப்பு, அவர்களின் வளங்களைப் பாதுகாத்தல் போன்ற பல அடிப்படை மற்றும் அவசியத் தேவைகளைக் கிடைக்கச் செய்கிறது இந்திய அரசியலமைப்புச் சட்டங்கள்.

**பழங்குடியினருக்கான இந்திய அரசியலமைப்புச் சட்டங்கள்**

**சரத்து 342:**

இந்தியாவில் பட்டியல் பழங்குடியினரை அரசியலமைப்பு ரீதியாக அடையாளம் காண்பதாக இப்பிரிவு உள்ளது. ஒரு குறிப்பிட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்திற்கான பட்டியல் பழங்குடியினராக, அதிகாரப்பூர்வமாக ஒரு பழங்குடியின சமூகத்தை அல்லது சமூகத்தில் உள்ள ஒரு குழுவை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கும் வகையில் இப்பிரிவு உள்ளது. அதாவது இந்தியாவில் சட்டப்படி யாரெல்லாம் பட்டியல் பழங்குடியினர் என்பதை இந்தச் சட்டப்பிரிவு தீர்மானிக்கிறது.

அரசின் மூலம் கிடைக்கும் கல்வி, வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு, அரசியலில் ஈடுபட, நலத்திட்ட உதவிகள் போன்ற அரசின் மூலம் கிடைக்கும் உதவிகள் பெற யாரெல்லாம் பழங்குடியினர் என்ற அங்கீகாரம் அவசியமாகிறது.

இவ்வாறு ST என்று அரசின் பிரிவின் கீழ் வரும் போது, அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் நிறுவனங்கள் மற்றும் அரசு பணிகளில் சிறப்பு இட ஒதுக்கீடு பெற முடிகிறது.

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் பழங்குடியினருக்குத் தனித் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசியல் அதிகாரத்தில் பங்கு உறுதி செய்யப்படுகிறது. இது போன்ற அரசின் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பெற அரசு குறிப்பிட்டுள்ள பட்டியல் பழங்குடியினர் என்ற அடையாளம் அவசியமாகிறது.

**சரத்து 244:**

இது பழங்குடியினர் பகுதிகளின் நிர்வாகம் மற்றும் ஆளுமைக்கான கட்டமைப்பை விளக்குவதாக உள்ளது. இந்தியாவின் பழங்குடி சமூகங்களின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாப்பதாக இச்சரத்து உள்ளது.

**சரத்து 275(1) :**

பழங்குடியினர்களின் நலனை மேம்படுத்துவதற்காக இந்திய ஒருங்கிணைந்த நிதியிலிருந்து இவர்களுக்கான மானியங்களை உறுதி செய்வதாக இப்பிரிவு உள்ளது. குடிநீர் வசதி, சாலை இணைப்பு, மின்சாரம் மற்றும் வீட்டுவசதி போன்ற திட்டங்கள் இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்றன.

**சரத்து 330**

இது இந்திய நாடாளுமன்ற மக்களவையில் பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான (ST) இட ஒதுக்கீடு பற்றி விளக்குகிறது. SC மற்றும் ST பிரிவினர்களுக்கு அவர்களின் மக்கள் தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப மக்களவையில் இடம் வழங்கப்படுகிறது.

**சரத்து 332**

இப்பிரிவானது மாநில சட்ட மன்றங்களில் பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியல் பழங்குடியினரின் (ST) அரசியல் பிரதிநிதித்துவத்தையும் ஆட்சி நிர்வாகத்தில் அவர்களது பங்களிப்பையும் உறுதி செய்வதாக இட ஒதுக்கீடு வழங்குகிறது.

சரத்து 330 மற்றும் சரத்து 332 ஆகியவை, நாட்டிற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் உருவாக்கப்படும் மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில், ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கும் பழங்குடியினருக்கும் இடங்கள் வழங்குவதன் மூலம் அவர்கள் தங்களின் குழுக்களுக்கான சமூகத்திற்கான குரலாகவும் அவர்களின் பிரநிதியாகவும் செயல்படச் செய்கிறது.

மேலும் எளிய சமூகங்களின் தேவைகளும் குரல்களும் நேரடியாக ஒலிக்கவும் சமூக நீதியை நிலைநாட்டவும் இப்பிரிவு வழிவகை செய்கிறது.

**சரத்து 335:**

மத்திய அல்லது மாநில சேவைகள் மற்றும் பதவிகள் நியமனம் செய்யும் போது ST மற்றும் SC பிரிவைச் சேர்ந்தவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதாக இப்பிரிவு உள்ளது. இவ்வாறு பின் தங்கிய சமூகத்தினருக்குப் பிரதிநிதித்துவம் அளித்தாலும் அதே சமயம் அரசு நிர்வாகத்தின் செயல் திறனை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்றும் இப்பிரிவு கூறுகிறது.

மேலும், பின் தங்கிய வகுப்பினரின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் வகையில் பல சட்டப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளது.

**சட்டப்பிரிவு 15(4):**

இது பட்டியல் பழங்குடியினருக்குக் கல்வி மேம்பாடுகளை அதிகரிப்பதற்கான உரிமைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.

**சட்டப்பிரிவு 46:**

பட்டியல் பழங்குடியினரின் கல்வி மற்றும் பொருளாதார ஆர்வத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களைச் சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் சுரண்டலில் இருந்து காப்பாற்றுவதற்கும் மாநிலங்களுக்குப் பல்வேறு உரிமைகளை வழங்குகிறது.

**சட்டப்பிரிவு 16(4) :**

இது சேவைத் துறைகளில் பின்தங்கிய வகுப்பினரின் எண்ணிக்கையை அதிகரிக்க, பல்வேறு பதவிகளில் இட ஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கும் சட்டப் பிரிவாகும்.

**சட்டப்பிரிவு 16(4A) :**

பட்டியல் சாதியினர் / பழங்குடியினரின் பதவி உயர்வு சார்ந்த திட்டங்களை உருவாக்க மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கும் சட்டப் பிரிவாகும்.

இவ்வாறு இந்திய அரசியலமைப்புச் சட்டங்களில் பழங்குடியினருக்கான சட்டங்களும் உள்ளன. இதைத் தவிர அவர்களின் உரிமைகளையும் கலாச்சாரத்தையும் பேணுவதற்காகப் பல சிறப்புச் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன.

**பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (SC/ST Prevention of Atrocities Act) :**

இது 1989 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. பழங்குடியினர் மற்றும் பட்டியல் சமூக மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள் பாகுபாடுகள் சாதி

ரீதியிலான தாக்குதல்கள் கொடுமைகள் போன்றவற்றைத் தடுப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதாகவும் இச்சட்டம் உள்ளது.

**வன உரிமைகள் சட்டம், 2006**

(FRA – Forest Rights Act)

காடுகளிலும் மலைகளிலும் பல தலைமுறை தலைமுறைகளாக, காலம் காலமாக வாழ்ந்து வரும் பழங்குடியினர்களின் நில உரிமைகளையும் வனப் பொருட்களையும் பயன்படுத்தும் உரிமைகளையும் சட்டபூர்வமாக்குவதாக இச்சட்டம் உள்ளது. பழங்குடியின மக்களைத் தங்களின் நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதைத் தடுப்பதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டது.

இச்சட்டத்தின் படி, 13.12.2006 ம் தேதிக்கு முன்பு வனத்தில் வாழும் பழங்குடியினருக்கு, 3 தலைமுறைகளாக (75 வருடங்கள்) வனத்தில் வாழும் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியினருக்கும் வன உரிமை பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**பஞ்சாயத்து (பட்டியலிடப்பட்ட பகுதிகளை விரிவுபடுத்தல்) சட்டம், 1996 – (Provisions of the Panchayats (Extension to Scheduled Areas) Act, 1996) PESA Act**

இச்சட்டம் பழங்குடியின பகுதிகளுக்கு உள்ளாட்சி மற்றும் சுய நிர்வாக அதிகாரத்தை வழங்குகிறது. இதன் மூலம் பழங்குடியினர்களின் பகுதிகளைப் பிறர் ஆக்கிரமிப்பதைத் தடுத்து தங்களின் வளங்களைப் பிறர் சுரண்டுவதையும் தடுக்கிறது.

**உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (Protection of Civil Rights Act) 1955**

இது தீண்டாமை ஒழிப்பதற்கும் அதனால் ஏற்படும் உரிமைகள் பறிப்பைத் தடுப்பதற்கும் இயற்றப்பட்ட சட்டமாகும்.

**கொத்தடிமைத் தொழில் முறை ஒழிப்புச் சட்டம்** (Bonded Labour System (Abolition) Act 1976

பொருளாதார சிக்கலாலும் வறுமையினாலும் வாங்கிய கடன்களைத் திரும்பக் கொடுக்க முடியாத நிலையினாலும் பழங்குடியின மக்களைக் கொத்தடிமைகளாகப் பயன் படுத்துவதைத் தடுத்து அவர்களை மீட்டு நல்வாழ்வு அளிப்பதற்கான சட்டமாக இது உள்ளது.

மேலும், மைய அரசின் மூலம் பழங்குடி மக்களின் வாழ்வியல் தேவைகள், பொருளாதாரத் தேவைகள் மற்றும் அடிப்படை வசதி வாய்ப்புகளை அளிக்கும் நோக்கத்தில் 3 திட்டங்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. **பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு மத்திய உதவி:**

   இந்தத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் நிதியானது, 60% வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30% வருவாய் ஈட்டும் தொழிலுக்கான உள்கட்டமைப்புப் பணிகள் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதாவது கறவை மாடுகள் வழங்கல், ஆடுகள் வழங்கல் போன்ற திட்டங்களுக்கானது. மீதமுள்ள 10% வேலை வாய்ப்பு பெறுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

2. **275(1) சட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு:**

   மேலே குறிப்பிட்டுள்ள படி, இந்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவியின் மூலம் பழங்குடியினர் பகுதிகளில் உட்கட்டமைப்புப் பணிகள், மின் இணைப்பு, மேம்பாலங்கள் அமைத்தல், சாலை இடுதல் போன்ற போக்குவரத்து வசதிகள் மற்றும் தடுப்பணை திட்டங்கள் போன்றவை செய்யப்படுகின்றன.

3. **அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு :**

   பழங்குடிகள் தங்கள் பாரம்பரியமான வீடுகள் கட்டல், அவர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல் மற்றும் தெரு விளக்குகள் அமைத்து கொடுத்தல்

போன்ற அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்திச் செய்ய மத்திய அரசானது 2013 – 2014 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் ரூ.20 கோடியை ஒதுக்கீடு செய்து வருகிறது.

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Adi Dravidar Housing & Development Corporation Ltd – TAHDCO)**

இது பட்டியல் பழங்குடியினர் மற்றும் பட்டியல் சாதியினருக்கான வீடுகள் அமைக்கவும் தொழில் முனைவோர்களை உருவாக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம் ஆகும்.

இந்தத் திட்டத்தின் முதல் நிலையில், தமிழ்நாடு மாநில அரசு திட்டங்களின் கீழ், **பட்டியல் பழங்குடியினருக்கான வாழ்வாதாரத் திட்டம்** என்பதாகப் பழங்குடியினருக்கு வங்கி கடனுடன் மானியமும் வழங்கப்படுகிறது. இதில்,

1. **தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

   சுய உதவிக் குழுக்கள் மூலமோ அல்லது தனி நபர்களோ 18 மற்றும் 65 வயதிற்கு உட்பட்டவர்கள் கல்வித் தகுதியை பொருட்படுத்தாது சுயமான தொழில் தொடங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2. **சுய உதவி குழுக்களுக்குப் பொருளாதார உதவி :**

   இத்திட்டமானது, மலர் வளர்ப்பு தோட்டக்கலை சார்ந்த தொழில் கைவினைப் பொருட்கள் உருவாக்கி சுற்றுலாத்தலங்களில் ஹோட்டல்களை நிறுவுதல் மற்றும் வருமானம் ஈட்டும் பிற தொழில் சார்ந்த செயல்பாடுகளுக்கு நிதியுதவி அளிக்கிறது.

3. **துரித மின் இணைப்புத் திட்டம் :**

   இத்திட்டத்தின் கீழ் பழங்குடி விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் அமைத்தல் போன்ற தேவைகளுக்காக மின் இணைப்புக் கட்டணம் இலவசமாக வழங்கப்படுகிறது.

4. **நில மேம்பாட்டுத் திட்டம் :**

   இந்தத் திட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு ஆழ்குழாய் கிணறுகள் அல்லது திறந்தவெளி கிணறுகள் அமைத்தல் பம்ப்செட்டுகள் அமைத்தல் சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் போன்று நீர்ப்பாசன வசதிகளுக்கு வங்கியில் கடனுடன் மானியமும் வழங்கி பழங்குடியினரின் நிலத்தின் பயன்பாட்டை அதிகரித்து நில வளத்தை மேம்படுத்துவதாக இத்திட்டம் உள்ளது.

5. **நிலம் வழங்கும் திட்டம் :**

   ஒவ்வொருவரும் தனிப்பட்ட நிலம் வைத்திருத்தல் என்பது சமுதாயத்தில் ஒரு மதிப்புமிக்கப் பொருளாகக் கருதப்படுகிறது. எனவே, பழங்குடியின விவசாயத் தொழில் செய்யும் பெண்களுக்கு அவர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக நிலம் வழங்கும் திட்டத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளது.

6. **பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் :**

   பழங்குடியின இளைஞர்கள் கல்வி பெற்று பிற வேலை வாய்ப்புகள் பெறுவது மட்டுமல்லாமல் தங்களின் நிலத்திலேயே சுய வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ளும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

   இதன் படி, பழங்குடியின இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வழங்கி, பயணிகள் வாகனம் அல்லது ஜீப் வாங்கவும் கனரக வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் வாங்கவும் நிதி வழங்குமாறு (குறிப்பிட்ட வரம்புகளுடன்) உருவாக்கப்பட்டுள்ளது.

7. சுயவேலைவாய்ப்புத் திட்டம் – Sepy-Special – (SEPY-C) – மருத்துவம் மற்றும் துணை மருத்துவ நிறுவனங்கள் :

இந்தத் திட்டத்தின் கீழ், இந்திய மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்துள்ள பழங்குடியின மருத்துவர்களுக்கு, அலோபதி, பல் மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், கண் மருத்துவம், இயற்கை மருத்துவம், யோகா ஆகிய மருத்துவத் துறைகளில் உள்ளவர்கள் தங்களுக்கு எனச் சொந்தமாக மருத்துவமனை, மருந்தகம், ஆய்வகம் (Laboratory) நிறுவவும் நிதி உதவி வழங்குகிறது.

போன்றவை மாநில அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் இரண்டாம் நிலையில், பழங்குடியினரின் பொருளாதார வளத்தை உயர்த்தவும் சுயமான வேலை வாய்ப்பை உருவாக்கவும் மத்திய அரசாங்கம், **தேசிய பட்டியல் பழங்குடியின நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSTFDC)** உருவாக்கி குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ்,

1. **ஆதிவாசி மகிளா சசக்திகரன் யோஜனா** (AMSY) :

பழங்குடியினப் பெண்கள் சிறு தொழில் மற்றும் சுய தொழில் தொடங்கி தனது சமூக மற்றும் பொருளாதாரத் தேவையைச் சுயமாகப் பார்த்துக் கொள்ளும் வகையில் இந்தத் திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்படுகிறது.

2. **ஆதிவாசி சிஷ்க்ஷா ரின் யோஜனா** (ASRY)

இது கல்விக் கடன் கொடுக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம், பழங்குடியின மாணவர்கள் Ph.D உள்ளிட்ட தொழில்முறை மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளைத் தொடர நிதியுதவி வழங்கப்படுகிறது.

3. **SHG களுக்கான மைக்ரோ கடன் திட்டம்** (MCS):

இந்தத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களின் வழி தகுதியுள்ள பழங்குடியினர்களுக்குச் சிறு கடன்களை வழங்கி நிதி உதவி செய்கிறது.

4. **கால கடன் :**

இந்தத் திட்டத்தின் மூலம் பழங்குடியினர்களுக்கு அவர்களின் தேவை அளவு வருமானம் ஈட்டும் வகையில் தொழில் துறை விவசாயம் மற்றும் சேவைத் துறையில் உள்ளவர்களுக்குக் காலக்கடன் வழங்குகிறது. போன்றவை மத்திய அரசினால் பழங்குடியினருக்காக உருவாக்கப்பட்ட த் திட்டங்கள் ஆகும்.

பழங்குடியின மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசும், மத்திய அரசும் பல்வேறு சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கி அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நலன்களைப் பேணுகிறது.

## முடிவுரை

மேற்கூறிய விவரங்களிலிருந்து, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பழங்குடியின மக்களின் வாழ்வியலையும் மக்கள் தொகையையும் கருத்தில் கொண்டு, அவர்களின் சுயாட்சியைப் பேணும் வகையில் பல்வேறு சிறப்புச் சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கியுள்ளது என்பதை அறிய முடிகிறது. குறிப்பாக, பொருளாதார உரிமைகள், நிதி உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமைகள் எனப் பல வாய்ப்புகள் இத்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.இருப்பினும், இச்சட்டங்களும் திட்டங்களின் பலன்களும் அம்மக்களுக்கு முழுமையாகப் போய் சேர்கிறதா என்பது இன்றும் பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது.

பெரும்பான்மையான பழங்குடியின மக்களுக்குத் தங்களுக்காக இயற்றப்பட்டுள்ள சிறப்புச் சட்டங்கள் குறித்த புரிதலே இல்லாமல் இருக்கின்றனர். எனவே, வெறும் சட்டங்களை இயற்றுவதோடு நில்லாமல், அச்சட்டங்களின்

நன்மைகள் பழங்குடியின மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிப்பதும் அரசின் தலையாய கடமையாகும். வீதி நாடகங்கள், காணொளிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக இச்சட்டங்கள் பற்றிய அறிவை மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும். சில நேரங்களில் திட்டமிடலில் வெளிப்படைத்தன்மை இல்லாததால் சட்டங்கள் தோல்வியடைகின்றன. மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்களின் உண்மையான தேவைகளை அறிந்து சட்டங்களை இயற்றும்போதுதான் அதன் பயன் அவர்களை நேரடியாகச் சென்றடையும்.

பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தாலும், **த. விஜயலட்சுமி** அவர்கள் குறிப்பிட்டது போல, அரசியலமைப்புச் சட்டத்தினால் கொண்டுவரப்பட்ட திட்டங்களால் பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அரசியலில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு மற்றும் வாய்ப்புகளைப் பழங்குடியின மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பல இடங்களில் தேர்தலில் வெற்றிபெற்ற பழங்குடியினப் பிரதிநிதிகளைக் 'கைப்பாவையாக'ப் பயன்படுத்தும் போக்குக் காணப்படுகிறது. இந்நிலை மாற, பழங்குடியின மக்களிடையே அரசியல் விழிப்புணர்வும் பதவி குறித்த தெளிவும் ஏற்படுவது அவசியமாகும்.

சுருங்கக்கூறின், பழங்குடியின மக்களின் வாழ்வியலை மேம்படுத்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தபோதிலும், கல்வி, பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பில் அவர்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இச்சூழலை மாற்றி, அவர்களைச் சமூகத்தின் முதன்மை நிலையில் கொண்டுவரும் பெரும் பொறுப்பு அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. அகத்தியலிங்கம், ச. 1972, தமிழகப் பழங்குடி மக்கள், அண்ணாமலை நகர்: சிவகாமி அச்சகம்
2. அரிச்சந்திரன், ச. 2018, தமிழகப் பழங்குடிகள் வரலாறு சமூகம் பண்பாடு, கோயம்புத்தூர் : தமிழ்த்துறை, கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி.
3. இந்திய அரசுக்காக சட்டத் துறை, 2009, இந்திய அரசமைப்பு, தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை.சக்திவேல், சு. 1998, தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. பக்தவத்சல பாரதி, 2018, தமிழகப்பழங்குடிகள், சென்னை: அடையாளம்.
5. பூங்குன்றன், ர. 2016, தொல்குடி வேளிர் வேந்தர், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. விஜயலட்சுமி, த. 2008, இரவாளர் பழங்குடி வாழ்வியல், சென்னை: ஜூபிடர் ஆப்செட் பிரிண்டர்ஸ்.
7. விஜயலட்சுமி, த. 2017, இருளர் பழங்குடிகளின் மருத்துவம், சென்னை: கௌரா பதிப்பகம்.


இணைய இணைப்பு


1. https://tahdco.com/tamil/schemes.php


*****